**Spl.CC.No.**80/2019

**29-10-2020 ஆம் தேதி அன்று சாட்சி P.W.16 மீண்டும் மனுவின் பேரில் (CMP.No. 628/2020) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி - 21.07.2010 ஆம் தேதியிலிருந்து தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக எந்த தேதி வரை பணிபுரிந்து வந்தீர்கள்?

பதில் - தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் நான் பணிபுரியவில்லை.

29.11.2011 ஆம் அன்று என்னை கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் இவ்வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தார்கள். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது நான், 21.07.2010 ஆம் தேதியிலிருந்து தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன் என தெரிவித்துள்ளேனா என்றால் அவ்வாறு நான் தெரிவிக்கவில்லை. ஈரோடு மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக எந்த தேதியிலிருந்து நான் பணியாற்றியதாக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் தெரிவித்தேன் என்றால், 07.01.2011 தேதி முதல் பணியாற்றியதாக ஈரோடு மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றியதாக தெரிவித்தேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை மத்திய சரக காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் எங்கு அமைந்துள்ளது என்றால், அவ்வலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. மேற்கு சரக காவல் கண்காணிப்பாளர் 28.11.2011 அன்று மாலை சென்னையிலிருந்து வாய்மொழியாக கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சொல்லும் பணியை செய்யும் படி சொன்னார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் வாய்மொழி உத்தரவின் படி முன்னிலையாகியதாக சொல்லியுள்ளேனா என்றால், அது குறித்து தற்சமயம் எனக்கு நினைவில் இல்லை. 2011

வருடத்தில் ஈரோடு மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு நான் தான் உயர் அதிகாரி ஆவேன். எனக்கு மேல் உயர் அதிகாரி அப்போது இல்லை. எழுத்து வழி உத்தரவு இல்லாமல், நான் எனது அலுவலக பணியை விட்டு வேறு பணிக்கு செல்லலாமா என்றால், உயர் அதிகாரிகளின் வாய்மொழி உத்தரவின் படி செல்லலாம். நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் கண்காணிப்பாளரிடம் அங்கீகார கடிதம் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எந்த தேதியில் எத்தனை மணிக்கு நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் கண்காணிப்பாளரை சந்தித்தேன் என்றால் 29.11.2011 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு சந்தித்தேன். **ExP**16 ஆவணத்தை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கு.வி.மு.ச.பிரிவு 166(1) ன் படி வழங்கியுள்ளாரா என்றால், ஆம். **ExP**16 ஆவணத்தில் 28.11.2011 என கையெழுத்துக்கு கீழே தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். **ExP**16 ஆவணத்தின் நகலை நான் கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொண்டதாக மேலொப்பம் அல்லது சுருக்கொப்பம் செய்துள்ளேனா என்றால், இல்லை. **ExP**16 ஆவணத்தில் உள்ள கைரேகை யாருடையது என்றால், திரு.அர்ச்சுனனின் தாயார் அவர்கள் கைரேகை வைத்தார். திரு.அர்ச்சுனனின் உறவினர், திரு.ஈஸ்வரன் கையெழுத்து செய்துள்ளார். **ExP**16 ஆவணத்தில் திரு. ஈஸ்வரனின் கையெழுத்துக்கு கீழே 29.11.2011 என தேதி இடப்பட்டுள்ளது. அதில் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். **ExP**16 ஆவணத்தின் நகல் திரு.ஈஸ்வரன் மற்றும் பழனியம்மாள் ஆகியோருக்கு வழங்கப்பட்டதாக குறிப்பு ஏதேம் இல்லை என்றால், சரிதான். ஆனால் சோதனை விவரம் தெரிந்து கொண்டதாக திரு.ஈஸ்வரன் எழுதி கையெழுத்து இட்டுள்ளார். **ExP**16 ஆவணம் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து சொல்லப்பட்டதாக குறிப்பு ஏதும் இல்லை என்றால், சரிதான். Addl.SP. அவர்கள் என்னை விசாரிக்கும்போது, கு.வி.மு.ச.பிரிவி 165(1)ன் படி எனக்கு 28.11.2011 தேதியிட்ட அங்கீகார கடிதம் வழங்கப்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால், அது குறித்து தற்சமயம் நினைவில் இல்லை. 29.11.2011 தேதி மாலை 03.00 மணிக்கு நான் Addl.SP. யை சந்திக்கும்போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் DSP, Inspectors மற்றும் காவலர்கள், தாசில்தார் போன்றோர்கள் இருந்தார்கள், யார் யார் என குறிப்பிட்டு தற்போது என்னால் சொல்ல இயலாது. இவ்வழக்கின் முதல் தகவல்அறிக்கையை நான் படித்து பார்த்திருக்கிறேன் என்றால், ஆம் படித்து பார்த்திருக்கிறேன். முதல் தகவல் அறிக்கையின் படி குற்றம் சாட்டபட்டவர், முன்னாள் அமைச்சர் திரு.பொங்கலூர். பழனிச்சாமி என்றால், சரிதான். முன்னாள் அமைச்சர் திரு. பொங்கலூர். பழனிச்சாமி தவிர, அவரது

குடும்பத்தாரோ அல்லது வேறு நபர்களோ குற்றம் சுமத்தப்பட்டவர்களாக இல்லை என்றால், முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்துத்தான் சொல்லமுடியும். **ExP**16 ஆவணத்தில் திரு. என். பழனிச்சாமி என்கிற பொங்கலூர். பழனிசாமி, முன்னாள் அமைச்சர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலூக்கா, இரக்கப்பட்டி கிராமம், செம்மாண்டம்பாளையம் என்பது ஈரோடு மாவட்டத்தை சேர்ந்தது அல்ல என்றால், சரிதான். திருப்பூர் மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்ட போது அம்மாவட்டத்திற்கென ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் அமைக்கப்படவில்லை, அந்த சமயத்தில் ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆள்வரை எல்லைக்குள் காங்கேயம் மற்றும் தாராபுரம் என்ற இரண்டு தாலூக்காக்கள் இருந்து வந்தன. வழக்குக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் , சான்று பொருட்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை சோதனையின் போது கைப்பற்ற வேண்டும் என **ExP**16 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்,சரிதான். சோதனையின் போது வழக்கு சம்பந்ததப்பட்ட ஆவணங்கள் தவிர வேறு எதையும் எடுக்ககூடாது என்றால், சரிதான். சோதனைக்கு முன்பாக செம்மாண்டம்பாளையம் என்ற ஊருக்கு சென்றிருந்திருக்கிறேனா என்றால், இல்லை. சோதனையின் போது தான் சென்றேன். செம்மாண்டம்பாளையம் என்பது ஒரு சிறிய கிராமம் ஆகும், அதில் எத்தனை வீடுகள் உள்ளன, எவ்வளவு மக்கள் தொகை போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் திரு.பிரகாஷ், வருவாய் ஆய்வாளர் திரு. விவேகானந்தன் ஆகியோர்கள் என்னோடு தான் செம்மாண்டம்பாளையத்திற்கு வந்தார்களா என்றால், ஆம். மேற்படி திரு. பிரகாசும், திரு.விவேகானந்தனும் செம்மாண்டம்பாளையம் , இரக்கம்பட்டி கிராமத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. சோதனைக்கு முன்பாக திரு.அர்ச்சுனன் அவர்களுக்கு சோதனையிட நாங்கள் வருவது குறித்து, தகவல் எதுவும் கொடுத்தோமா என்றால், அவ்வாறு முன்னமே தகவல் கொடுக்கவில்லை. செம்மாண்டம்பாளையத்தில் வசிக்கும் முக்கிய பிரமுகர்களை சாட்சியாக இருப்பது குறித்து அழைத்தோமா என்றால், ஆம். அவ்வாறு அழைக்கப்பட்ட நபர் தான் திரு.ஈஸ்வரன் ஆவார். திரு.ஈஸ்வரன் என்பவர் திரு.அர்ச்சுனனின் உறவினர் என்றால், ஆம். திரு. அர்ச்சுனனின் உறவினர் அல்லாது, தனிப்பட்ட மதிப்பிற்குரிய நபர்களை சாட்சியாக இருப்பதற்காக அழைத்தேனா என்றால் அழைத்தேன் யாரும் சாட்சியாக நிற்க முன் வரவில்லை. அவ்வாறு சாட்சியா நிற்க வேண்டி அழைக்கப்பட்ட நபர்கள் யார் யார் என்றால் அது குறித்து தற்போது நினைவு இல்லை. மதிப்பு மிகு நபர்களை சாட்சியாக இருக்க அழைத்ததாகவும், யாரும் அவ்வாறு சாட்சியாக

நிற்க வரவில்லை என தற்பொழுது நான் சொல்லும் விவரத்தை Addl.SP. விசாரணையில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. திரு.அர்ச்சுனன் வீட்டில் இல்லாததாலும், பழனியம்மாள் மட்டும் வீட்டில் இருந்ததாலும் எனவே திரு.அர்ச்சுனனின் உறவினர் திரு.ஈஸ்வரன் என்பவருக்கு தகவல் தெரிவித்து அவரை வர சொன்னதாக Addl.SP. என்னை விசாரிக்கும்போது சொல்லியிருக்கிறேனா என்றால், ஆம் சொல்லியிருக்கிறேன். சோதனைக்கு சாட்சியாக நிற்பதற்காக உள்ளூரில் வசித்து வரும் மதிப்பு மிகு நபர்களை அழைத்தாகவும், யாரும் முன்வரவில்லை என சொல்வதும், முதன்முதலாக நீதிமன்றத்தில் தெரிவிக்கிறேன் என்றால், சரிதான். எனது குழுவில் ஆய்வாளர் ராஜேஷ், பெண் காவலர் ராமதிலகம் மற்றும் இரண்டு காவலர்கள் இருந்தார்கள். அவர்களது பெயர்கள் தற்சமயம் நினைவில் இல்லை. சோதனையின் பொழுது வரைபடம் எதுவும் வரையவில்லை. மகஜரில் விவரங்களை குறிப்பிட்டுள்ளேன். பார்வை மகஜர் என நான் தயார் செய்யவில்லை, மகஜர் மட்டுமே தயார் செய்தேன். Addl.SP. என்னை விசாரிக்கும்போது பார்வை மகஜர் தயார் செய்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால், எனக்கு ஞாபகமில்லை. சோதனையில் இரண்டு ஆவணங்களை கைப்பற்றினேன். அந்த ஆவணங்கள் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட திரு.பொங்கலூர்.பழனிச்சாமிக்கு தொடர்புடையதா என்றால், சந்தேகத்தின் அடிப்படையில் அந்த ஆவணங்களை கைப்பற்றினேன். அவ்வாவணங்கள் இவ்வழக்கிற்கு தொடர்புடையதா என்பது புலன் விசாரணையில் தான் தெரியவரும். 2007 வருட டைரி கைப்பற்றினேன். அதில் வரவு செலவு கணக்குகள் இருந்தது. அந்த டைரி யாரது டைரி என குறிப்பிடபடவில்லை. மற்றொரு ஆவணம் கணிணி சிட்டா. பட்டா எண். 943 என இருந்தது. அது பிரசிடண்ட் பூமிதான போர்டு என்ற பெயரில் இருந்தது. **ExP**17 மகஜரில் ஒவ்வொரு பக்கத்திலும் பழனியம்மாளின் கைரேகை இல்லை என்றால், சரிதான். கடைசி பக்கத்தில் மட்டும் தான் பழனியம்மாளின் கைரேகை உள்ளது என்றால், சரிதான். **ExP**18 சோதனை ஜாபிதாவில் திரு.ஈஸ்வரனின் கையெழுத்தோ, பழனியம்மாளின் கைரேகையோ இல்லை என்றால், சோதனை பட்டியலில்(அச்சுப்படிவம்) திரு.ஈஸ்வரனின் கையெழுத்து பெறப்பட்டுள்ளது. சோதனை பட்டியலில் இணைப்பு தாளில் திரு.ஈஸ்வரனின் கையெழுத்தும், பழனியம்மாளின் கைரேகையும் இல்லை என்றால், சரிதான். சோதனை பட்டியலில், சோதனை செய்யப்பட்ட வீட்டுகாரரின் பெயர் என்ற காலத்தில் திரு.அர்ச்சுனன் உறவினர் திரு.ஈஸ்வரன் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 29.11.2011 தேதி செம்மாண்டம்பாளையம், திரு.அர்ச்சுனன் வீட்டிற்கு சென்றதாக சொல்வதும், அந்த வீட்டை சோதனை செய்ததாக சொல்வதும், அப்போது சாட்சிகளாக திரு.விவேகானந்தன்,

திரு.பிரகாஷ் ஆகியோர்கள் இருந்ததாக சொல்வதும், எனது குழுவில் ஆய்வாளம் ராஜேஷ், காவலர்கள் மற்றும் பெண் காவலர் ராமதிலகம் இருந்ததாக சொல்வதும், திரு.ஈஸ்வரனை சாட்சியாக அழைத்தாக சொல்வதும், சோதனையின் போது **ExP**17, **ExP**18 தயாரித்தாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. **ExP**16 அடிப்படையில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக சொல்வது தவறு என்றால், சரியல்ல. சோதனையின் போது இரண்டு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு, Addl.SP. யிடம் ஒப்படைத்தாக நான் சொல்வது தவறு என்றால், சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை.